**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 74/2020 |
| Name | : Natarajan |
| P.W. | : 1 |
| Father Name | : Subbaiyya |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.06.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தஞ்சாவூரில் வசிக்கிறேன். நான் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அலுவலக மேலாளராக வேலை செய்து வந்தேன். 18.12.2019 ம் தேதி மாலை 05.00 மணி அளவில் தலா ¼ கிலோ எடை கொண்ட 12 காப்பர் பட்டைகளை காணவில்லை என்று எனக்கு தகவல் கொடுத்தார்கள். மறு நாள் 19.12.2019 ம் தேதி மாலை 05.30 மணி அளவில் வடிப்பாலைக்கு முத்துக்குமரன், ஆனந்த மனோகரன் ஆகியோருடன் சென்று ஆய்வு செய்த போது 12 பட்டைகள் காணாமல் போயிருப்பது தெரிய வந்தது. அப்போது வடிப்பாலையைச் சுற்றி ஆய்வு மேற்கொண்ட போது வெள்ளைச்சாமி என்பவர் பவர் ஹவுஸ்க்கு பின்புறம் காம்பவுண்ட் சுவருக்கு அருகில் கையில் பையுடன் நின்று கொண்டிருந்தார். அப்போது 3 பேரும் சேர்ந்து அவரை பிடித்து அவர் கையில் இருந்த 12 பட்டைகளையும் மீட்டு ஆலையின் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு மடத்துக்குளம் காவல் நிலையத்தில் ஒப்படைத்து உடன் வந்த ஒரு நபரை கொண்டு எழுத்து பூர்வமாக புகார் மனு

கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல் நிலையத்தில் படிவம் 91 என்று ஒன்று கொடுத்தார்கள் அதில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டேன். படிவம் 91 ல் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **படிவம் 91ல் 1வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் 12 காப்பர் பிளேட்டுகள் காணாமல் போனது ஆகும். **12 காப்பர் பிளேட்டுகள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் அப்போதைய மதிப்பு ரூ.30 ஆயிரம் இருக்கும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒரு சிறப்பு அதிகாரியின் கீழ் செயல்படுகிற அரசு சார்ந்த நிறுவனம். ஆலையில் சுமார் 250 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 150 தற்காலிக பணியாளர்கள் வேலை செய்வார்கள். தற்காலிக பணியாளர்கள் வேலையில் சேரும் போது அவர்களின் சான்றிதழ்களை பெறுவது வழக்கம். நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்கள் இருவருக்கும் வருகை பதிவேடு பராமரிக்கப்பட்டு வந்தது. எதிரி எந்த தேதியில் பணியில் சேர்ந்தார் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆலைக்குள் எந்த வாகனம் வந்தாலும் 2-3 காவலர்கள் மூலமாக பரிசோதித்து தான் அனுப்புவது வழக்கம் என்றால் சரிதான். பணியாளர்கள் வரும் போதும் போகும் போதும் சோதனை செய்வது வழக்கம் என்றால் சரிதான். சர்க்கரை ஆலையின் வடிப்பாலையின் சுற்றுச்சுவர் சுமார் 12 அடி இருக்கும். சுவருக்கு மேல் பாதுகாப்பு மின் கம்பி இருக்கும் என்றால் அது ஞாபகம் இல்லை.

(2) முத்துக்குமரன், ஆனந்த மனோகரன் மற்றும் ரவிக்குமார் எனக்கு கீழே வேலை செய்து வந்தார்கள் என்றால் சரிதான். புகாரை நான் கைப்பட எழுதவில்லை. உயர் அதிகாரிகள் எழுதிய புகாரை நான் கொடுத்தேனா என்றால் இல்லை காவல் நிலைய எழுத்தர் எழுதிய புகாரில் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். 3 சிப்ட் அடிப்படையில் தொழிலாளர்கள் வேலை செய்வார்கள். ஒவ்வொரு சிப்டிலும் சுமார் 50 பேர் வடிப்பாலை பராமரிப்பு வேலை செய்வார்கள். ஒவ்வொரு சிப்ட்டுக்கான நேரத்தை புகாரில்

சொல்லவில்லை என்றால் சரிதான். சிப்ட் நேரம் என்ன என்றால் காலை 06.00 முதல் மதியம் 02.00 மணி, மதியம் 02.00 முதல் இரவு 10.00 மணி, இரவு 10.00 மணி முதல் காலை 06.00 மணி வரை. எதிரி எந்த சிப்டில் உள்ளே வந்தார் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி அன்றைய தினம் வேலைக்கு வந்தார் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் அவர் பணிக்கு வந்ததாக காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(3) ஆலையில் கண்காணிப்பு கேமரா உள்ளது. கண்காணிப்பு கேமராவில் எதிரி பொருள் எடுத்ததாக பதிவு எதுவும் போலீஸில் கொடுத்தேனா என்றால் எதிரி பணிபுரிந்த இடத்தில் கண்காணிப்பு கேமரா வைக்கப்படவில்லை. காணாமல் போனதாக சொன்ன பொருட்கள் எந்த நிறுவனத்தில் இருந்து வாங்கப்பட்டது என்ற ஆவணம் அதில் ஏதாவது குறியீடு உள்ளதா என்பதை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. காணாமல் போனதாக சொல்லும் பொருள் ரூ.30 ஆயிரம் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 13.12.2019 ம் தேதி முதல் 1, 2 காப்பர் பட்டைகள் காணாமல் போனது பற்றி எனது உயர் அதிகாரிகள் அல்லது காவல் நிலையத்தில் தெரிவித்தேனா என்றால் 13.12.2019 ம் தேதி முதல் காணாமல் போனதாகவும் மொத்தம் 12 பட்டைகள் காணாமல் போனதாகவும் 18.12.2019 ம் தேதி எனக்கு தகவல் வந்தது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் 13 ம் தேதியே காணாமல் போயிருந்தால் நான் அப்போதே புகார் கொடுத்திருப்பேன் என்றும் ஒரு வாரம் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

(4) காணாமல் போன பொருட்களுக்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், எனது பணியாளர்கள் சொன்னதன் பேரில் சந்தேகத்தின் அடிப்படையில் அவர் மீது தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி தவறு செய்திருந்தால் கண்காணிப்பு கேமரா பதிவு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. சிப்டில் 50 பேர் உள்ள நிலையில் பணியாளர்களை யாரையும் சாட்சியாக சேர்க்காமல் எனது அரசு அலுவலகத்தில் இருப்பவர்களை சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. காப்பர் பட்டைகள் உள்ள இயந்திரம் நான்கு சுவர் உள்ள அறைக்குள் தான் இருக்கும் வெளியில் இருந்து பார்வைக்கு தெரியாது. யார் வேண்டுமானாலும் அந்த அறைக்குள்

செல்ல முடியுமா என்றால் பவர் ஹவுஸில் அந்த சிப்டில் வருபவர்கள் உள்ளே செல்ல முடியும். அந்த அறைக்குள் உள்ளே செல்வதற்கு பிங்கர் பிரிண்ட் எதுவும் வைக்கத் தேவையில்லை. வேறு யாரோ செய்த தவறை எதிரி செய்ததாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கையில் வைத்திருந்ததாக சொல்லும் பையின் நிறம் மற்றும் அதில் எதுவும் வாசகம் எழுதியிருந்ததா என்பது குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். காப்பர் பட்டையின் நீள, அகலம் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு காப்பர் பட்டையை கொண்டு வரும் போது அதன் எடையை அளந்து பார்த்தோமா என்றால் இல்லை. மின்சார மேற்பார்வையாளரின் கருத்துப்படி புகாரில் காப்பர் பட்டையின் எடையை குறிப்பிட்டேன். யாருடைய கருத்துப்படி எடையை குறிப்பிட்டேன் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

(5) நான் சொன்னபடி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரி எந்த குற்றச் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும், காணாமல் போன பொருளை ஏதோ ஒரு வகையில் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி பொருளை இயந்திரத்தில் கழட்டுவதை பார்த்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.12 17:41:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 74/2020 |
| Name | : Muthukumaran |
| P.W. | : 2 |
| Father Name | : Ramar |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.06.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பத்தூரில் வசிக்கிறேன். நான் மின்சார உதவி பொறியாளராக உள்ளேன். அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஆய்வு செய்வதற்காக ஆனந்த மனோகரன் என்னை அழைத்தார். ஆய்வு செய்த போது சார்ஜ் செய்ய முடியவில்லை. அதில் உள்ள காப்பர் பட்டைகளை (charging plates) காணவில்லை. அங்கு பணியில் இருந்த பணியாளர்களை அனைவரிடம் விசாரித்தோம். யாரும் சரிவர பதில் சொல்லாததால் அன்றைக்கு விட்டுவிட்டோம். **19.12.2019** ம் தேதி மாலை அலுவலக மேலாளர் நடராஜனிடம் தகவல் தெரிவித்தோம். மாலை சுமார் **06.00** மணி அளவில் அவர் வந்து ஆய்வு செய்தார். அப்போது பவர் ஹவுஸ் காம்பவுண்ட் சுவற்றை ஒட்டி வெள்ளைச்சாமி நின்றிருந்தார் ஒரு பேக் வைத்திருந்தார். அங்கு பொதுவாக யாரும் செல்ல மாட்டார்கள். வெள்ளைச்சாமி ஒரு சின்ன பையில் காப்பர் பட்டைகளை வைத்திருந்தார். அவரை மேலாளருடன் மடத்துக்குளம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தோம்.

வெள்ளைச்சாமியை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அலுவலக மேலாளர் புகார் கொடுத்தார். காவல் நிலையத்தில் படிவம் ஒன்று கொடுத்தார்கள் அதில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டேன். படிவம் 91 ல் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **படிவம் 91ல் 2 வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 – 12 காப்பர் பிளேட்டுகள் தான் காணாமல் போனது ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சிப்டுக்கு எத்தனை பணியாளர்கள் வருவார்கள் என்றால் மின்சார பிரிவிற்கு 2 பேர் வருவார்கள். மேலாளர் அழைத்தன் பேரில் தான் அங்கு சென்றேனா என்றால் இல்லை. எனக்கு அந்த ஆலை பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அந்த காப்பர் பட்டைகளை 2 நட் போட்டு தான் பயன்படுத்த முடியும் என்றால் சரிதான். உபரி காப்பர் பட்டைகளை அவசர தேவைக்காக வைத்திருப்போம் என்றால் சரிதான். நான் சென்று பார்த்த போது போல்ட், நட் எதுவும் அங்கு இல்லை என்றால் சரிதான். தற்போது சொன்னது போல் தான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேன். பணியாளர்கள் வேலைக்கு உள்ளே வரும் போது ஸ்பேனரோ மற்ற உபகரணங்களோ கொண்டு வர அனுமதி இல்லை என்றால் சரிதான். அந்த அறைக்குள் அனைத்து உபகரணங்களும் இருக்கும். உபகரணங்கள் எடுத்து போல்ட், நட்டை கழட்டுவதற்கு அனுமதி வாங்க வேண்டுமா என்றால் இல்லை.

(2) நான் சொன்னது போல் அவர் பொருட்கள் எதுவும் எடுக்கவில்லை என்றும், எங்கள் கையிருப்பில் உள்ள பொருட்களை வைத்து அவர் மீது புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. பணியாளர்களை விசாரித்தது பற்றி போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொன்னேன். பணியாளர்களை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரித்தார்கள். காணாமல் போனதாக சொல்லும் பொருளை யார் கழட்டியது என்று எனக்கு தெரியாது என்றால் கழட்டும் போது பார்க்கவில்லை மாலையில் பிடித்த போது தான் தெரியும். உண்மையிலேயே எதிரி எந்த குற்றச் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும், எந்த பொருட்களையும் உள்ளேயும், வெளியேயும் எடுத்துச் செல்ல இயலாது என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(3) எதிரி கையில் வைத்திருந்ததாக சொல்லும் பை என்ன நிறம் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் விசாரித்த போது நேரம் மாலை 06.30 மணிக்கு மேல் இருக்கும். நான் இரவு 10.00 மணி வரை காவல் நிலையத்தில் தான் இருந்தேன். வழக்கிற்கும், வழக்குச் சொத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் நான் கையொப்பம் செய்த படிவத்தில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என்றால் சரிதான். பொருட்கள் சம்மந்தமான அடையாளத்திற்காக கையெழுத்து கேட்டார்கள் போட்டேன்.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.12 17:41:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 74/2020 |
| Name | : Ananda Manoharan |
| P.W. | : 3 |
| Father Name | : James |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2026

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் வசிக்கிறேன். அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பாலையில் எலக்ட்ரீசியனாக உள்ளேன். 18.12.2019 ம் தேதி காலை நேரத்தில் மின்சார இணைப்பு கொடுக்க முடியவில்லை. பராமரிப்பு பணி நடைபெற்று கொண்டிருந்த நேரம் எனது மேல் அதிகாரி முத்துக் குமரனிடம் தெரிவித்தேன். அவர் 19.12.2019 ம் தேதி அவர் வந்து ஆய்வு செய்தார். மாலை 05.30 மணி அளவில் நானும், அலுவலக மேலாளர் மற்றும் முத்துக்குமரன் பவர் ஹவுஸ் சென்றோம். ஆய்வு செய்து கொண்டிருந்த போது பின்புறம் காம்பவுண்ட் சுவர் அருகே வெள்ளைச்சாமி பையுடன் நின்றிருந்தார். அவரை கூப்பிட்டு அலுவலக மேலாளரும், முத்துக்குமரனும் விசாரித்தார்கள் அவர் கையில் பைக்குள் 12 காப்பர் பட்டைகள் இருந்தது. விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தோம். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 காப்பர் பட்டைகள் தான் காணாமல் போனது ஆகும். வெள்ளைச்சாமியை நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) மின் இணைப்பு கொடுக்க முடியவில்லை என்று நான் சொல்லி தான் மேலாளருக்கு தெரியும் என்றால் சரிதான். அதே பிளாண்டில் தான் நான் இன்சார்ஜாக இருந்தேன் என்றால் சரிதான். அன்றைய தினம் சிப்டிற்கு எத்தனை பேர் வந்தார்கள் என்றால் அந்த சமயத்தில் சுத்தம் செய்து வந்ததால் 3 பேர் வந்தார்கள். எங்கள் பிரிவிற்குள் செல்வதற்கு முன்பு பாதுகாவலர்கள் சோதனை செய்து தான் அனுப்புவார்கள் என்றால் சரியல்ல மெயின் கேட்டில் தான் சோதனை செய்வார்கள். காப்பர் பட்டைகள் உருகினால் அதை மாற்றுவது வழக்கம். உபரியாக காப்பர் பட்டைகளை வைத்திருப்போம் என்றால் சரிதான்.

(2) அவர் கையில் வைத்திருந்த காப்பர் பட்டைகள் அனைத்தும் ஒரே அளவில் உள்ள பட்டைகளா என்றால் ஆமாம். எதிரியை காவல் நிலையத்தில் விசாரித்த பின்பு தான் ஒப்புக்கொண்டாரா என்றால் ஆமாம். அதுவரை மற்ற பணியாளர்களை போலீசார் விசாரித்தார்களா என்றால் ஆமாம். போலீசார் ஆலைக்கு வந்து பணியாளர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பையின் நிறம் மற்றும் அதில் ஏதும் வாசகம் எழுதி இருந்ததா என்று ஞாபகம் இல்லை. போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். பாதுகாப்பை மீறி எந்த பொருளையும் வெளியே கொண்டு செல்ல இயலாது என்றும் கையிருப்பில் இருந்த பட்டைகளை கொண்டு பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான், அ.சா.2 ம் மேலாளருக்கு கீழே தான் வேலை செய்கிறோம் என்றால் சரிதான். மேலாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த பொருளையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. **மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.12 17:41:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்